DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.3/2022 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | சேங்கைச்சாமி |
| Father's Name | : | ஆதிமூலம் |
| Village | : | கலியாந்தூர் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 54/2024 |

**(வழக்கின் எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.12.2024

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கலியாந்தூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது மகன் ஆவார். பட்டியல் சாட்சிகள் திவாகர், மலைராஜன், அவினாஷ்குமார், அஜித் ஆகியோர்களை தெரியும். எதிரி முத்துக்குமாரினுடைய அம்மா ரோகிணிக்கும் எனக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுவிட்டதாக எதிரி சொல்லிக்கொண்டிருந்தார். இது தொடர்பாக அவ்வாறு எதுவும் இல்லையென நான் சொல்லி ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பேசி தீர்த்துவைக்கப்பட்டது. அதன் காரணமாக முன் விரோதம் ஏற்பட்டது. கடந்த 17.02.2021 ம் தேதி காலை சுமார் 7.15 மணியளவில் நானும் திவாகரும் கலியாந்தூரில்

உள்ள மட்ட ஊரணி தென்கரை படிக்கட்டு அருகே திவாகருடன் பேசிக்கொண்டிருந்த போது மேற்குபக்க நாடக மேடைக்கு பின்னால் இருந்து ஆஜர் எதிரி வந்து என்னை ஓத்தா, உங்கம்மா என ஆபாசமான வார்த்தைகாளல் திட்டினார். திட்டிக்கொண்டு தலையில் அரிவாளால் வலதுபுற தலையில் வெட்டினார். எனது வலது கை மணிக்கட்டுக்கு மேல் வெட்டினார். வலது தோள்பட்டையில் வெட்டினார். சாட்சி தனது வலது தோள்பட்டை, வலது கை மணிக்கட்டில் அருகில் உள்ள காயத்தழும்பை காட்டுகிறார். தலையிலும் காயம் உள்ளதாக தழும்பை காட்டுகிறார்) வெட்டும்போது என்னை இதோடு செத்து தொலைந்துபோடா என்று சொன்னார் அதோடு நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை திவாகர், அவினாஷ், ஆகாஷ், மலைராஜன், எனது மகன் தினேஸ்வரனும், அஜித் ஆகியோர்கள் சேர்ந்து என்னை ஆட்டோவில் ஏற்றி திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்கள். அதன்பிறகு எனக்கு முற்றிலும் சுயநினைவு இழந்துவிட்டேன். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் அரிவாளால் தான் ஆஜர் எதிரி சம்பவத்தின் போது என்னை வெட்டினார். மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு பூண் போட்ட அரிவாள் **அ.சா.பொ. 1** ஆகும். எனக்கு மூன்று நாட்கள் கழித்து தான் சுயநினைவு வந்தது. அப்போது நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அதன்பிறகு சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.06 17:31:49 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.